
# தொபக்கடீர்

கீதா தர்மராஜன்

சித்திரம் : வந்தனா பிஸ்ட்



கதாவின் 300எம் திங்க்புக்


வீசும் பெரிய காற்றும்
நானும்,
என் குட்டித்தோழனும்
நாங்கள் ஓடுகிறோம் பாடுகிறோம்
ஊஞ்சலாடுகிறோம் குதிக்கிறோம்
மேலே உயரே மேலே உயரே...



இதோ இப்போது
நாங்கள் இங்கே இருக்கிறோம்
இதோ இப்போது
நாங்கள் அங்கே இருக்கிறோம்

நாங்கள் மேகங்களின் மேலும் கீழும் செல்கிறோம்

அந்த மிகப் பழைய மரத்தின் புத்தம்புது இலைகளுக்குள்
நுழைந்து புகுந்து வெளியே வருகிறோம்


ஸ்வுஷ்ஷ்ஷ்ஷ்ஷ்....

மிதக்கிறோம் மூழ்குகிறோம்

கீழே
கீழே கீழே
இன்னும்
கீழே...

தொபுகடீர்! புல்வெளிக்குச் செல்கிறோம்

நதியிலுள்ள வானம் புன்னகைக்கிறது





# காற்றும் மரமும்
# நண்பர்களும் நானும்

## செயல்பாடு – 1


### காலியாயிருக்கிறதா? நிரம்பியிருக்கிறதா?

ஒரு பலூனை எடுத்துக்கொண்டு அதில் என்ன இருக்கிறது என்று கண்டுபிடிக்கலாம் வாருங்கள்!




சின்ன பலூன் ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள்.

2




அந்த பலூனை ஒரு குழாயில் பொருத்தி அப்படியே இருக்கச் செய்யுங்கள்.

3




இப்போது மெதுவாக அந்தக் குழாயைத் திறந்து பலூனில் தண்ணீரை நிரப்புங்கள்.



இப்போது பலூன் எப்படி உருமாறுகிறது என்பதைப் பாருங்கள்.

5



பலூனில் தண்ணீர் நிரம்பியதும் உடனே குழாயை மூடிவிடுங்கள். இல்லையென்றால் பலூன் வெடித்துவிடும்!

உங்களுடைய வயிறு ஒரேயடியாக காலியாகி உங்களுக்கு மிகவும் பசிக்கும்போது நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்கள் வயிறு நிரம்பிவிட்டது என்று எப்போது உங்களுக்குத் தெரியும்?



## செயல்பாடு – 2



### உங்களால் எதிரான விஷயங்களைச் செய்யமுடியுமா?



கீழே சில எளிய செயல்களும் அவற்றுக்கு எதிரான செயல்களும் தரப்பட்டுள்ளன

| | | |
|---|---|---|
| எழுந்திரு - உட்கார் | மூச்சை உள்ளுக்கு இழு - மூச்சை வெளியேற்று | கைகளை மேலே உயர்த்து - கைகளை கீழே இறக்கு |
| தூங்கு - விழித்துக்கொள் | கத்து - கிசுகிசுப்பாகப் பேசு | அழு - சிரி |

இப்போது உன் நண்பர்களையெல்லாம் ஒன்று சேர்த்து இந்த விளையாட்டை விளையாடி மகிழ்வாயாக!? நீங்களெல்லோரும் 'அ', 'ஆ' என்று இரு குழுக்களாகப் பிரிந்து எதிரெதிராக நின்று கொள்ளுங்கள். குழு 'அ' ஒரு செயலைச் செய்யவேண்டும். குழு 'ஆ' உடனே அதற்கு எதிரான செயலைச் செய்யவேண்டும்.


இப்படி எதிரெதிரான செயல்களைச் செய்து விளையாடக்கூடிய சுவாரசியமான வேறு விளையாட்டுகள் உங்களுக்குத் தெரியுமா? அத்தகைய விளையாட்டுகளை உங்களால் உருவாக்க முடியுமா?



## செயல்பாடு – 3



### வடக்கா, தெற்கா, கிழக்கா மேற்கா?



இதோ ஒரு குட்டிப் பாட்டு. உங்கள் நண்பர்களோடு இதைப் பாடி ஆடி மகிழலாம்!

ஒரு அழகிய சிட்டுக்குருவிக்கு நான்கு குட்டிக்குருவிகள் இருந்தன.
அவை நான்கும் வேடிக்கையாகச் சிறகடித்துப் பறந்தன.
ஒன்று சூரியன் உதிக்கும் கிழக்கு திசையில்
ஒன்று சூரியன் ஓய்வெடுக்கும் மேற்குதிசையில்
ஒன்று பனிபடர்ந்த வடக்குதிசையில்
ஒன்று கடல்விரிந்த தெற்குதிசையில்
அப்படி உலகெங்கும் சுற்றித் திரிந்து
இறுதியாக வீட்டிற்குத் திரும்பின.
வடக்கோ தெற்கோ, கிழக்கோ மேற்கோ
வீடே, இனிய வீடே மிகவும் சிறந்தது!





நீ, வீட்டிலிருக்கும்போது, தினமும் காலையில் சூரியன் எந்தப் பக்கத்திலிருந்து மேலே வரும்?



**கீதா தர்மராஜன்:** குழந்தைகளுக்கான கதைகள் எழுதுவதை மிகவும் விரும்புபவர். TARGET (செயல் இலக்கு) என்ற குழந்தைகளுக்கான இதழின் ஆசிரியர்களில் ஒருவர். மேலும், பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தின் இதழான பென்சில்வேனிய கெஸட்டிலும் (The Pennsylvania Gazette) எழுதியவர் இலக்கியம் மற்றும் கல்விப் பணிகளில் குறிப்பிடத்தக்க சேவை செய்தமைக்காக இவருக்கு 2012 ஆம் ஆண்டு பெருமைமிகு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

**வந்தனா பிஸ்ட்:** சித்திரக்கலையில் சிறப்புக்கல்வி கற்று தில்லி ஓவியக் கல்லூரியில் நுண்கலையில் பட்டம் பெற்றவர். இவர் சித்திரங்கள் தீட்டிய முதல் நூல் 'எ டிக்கெட் டு ஹோம் அண்ட் அதர் ஸ்டோரீஸ்'. இவரது நூல்கள் ஜப்பான் மற்றும் பிராடிஸ்லாவில் கண்காட்சிகளில் ; இடம்பெற்றன. கதாவால் வெளியிடப்பட்ட 'நீண்ட கூந்தலுடனான இளவரசி' என்ற நூலுக்கு இவர் வரைந்த சித்திரங்களுக்காக 1998ஆம் ஆண்டு இவருக்கு சித்ரகலா விருது கிடைத்தது. இதே சிறுவர் புத்தகத்திற்காக சித்திர நூல்களுக்கான 'நோமா கன்கர்ஸ்'; போட்டிகளில் ஊக்க விருதும் (Noma Concours) பெற்றவர். குழந்தைகளுக்கான இதழ்கள் மற்றும் நூல்களுக்கு ஏராளமான சித்திரங்கள் வரைந்தவர். வந்தனா ஓர் எழுத்தாளரும்கூட. படைப்பெழுச்சி மிக்க புனைவெழுத்துக்காக 1994ஆம் ஆண்டு இவருக்கு கதா விருது கிடைத்தது.

ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்தது: லதா ராமக்கிருஷ்ணன்

KATHA

கதா பதிவு செய்யப்பட்ட, லாபநோக்கமற்ற அமைப்பு. 1988இல் துவங்கப்பட்டது. எழுத்தறிவிலிருந்து இலக்கியத்திற்குத் தொடரும் இயக்கத்தை சாத்தியமாக்குவதே எங்கள் நோக்கம்.

''இந்திய மணிமகுடத்திலிருக்கும் அருங்கல்வி முத்து கதா''

— Naoyuki Shinohara, Deputy Managing Director, IMF

நகரங்களில் நிலவும் சாதாரண, அசாதாரண துயரங்களைக் கையாளவும் சமாளிக்கவும் மேற்கொள்ளப்படும் படைப்பூக்க முன்முயற்சிகள் எல்லாவற்றுக்கும் மிகச் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கிறது கதா.

— Charles Landry, *The Art of City Making*

கதாவுக்கு குழந்தைகள் என்றால் கொள்ளைப் பிரியம். அந்த அன்பும் அக்கறையுமே இத்தனை அற்புதச் சித்திரக்கதை நூல்களை கதா உருவாக்கக் காரணம்.

— Time Out

கதா நூல்களில் வரும் குழந்தைகள் செய்வதைப்போல் குழந்தைகளால் தங்கள் சமூகங்களில் நிலையான நிஜமான மாற்றத்தை செய்ய முடியும் என்ற சிந்தனையே கதாவினுடைய பணியை முன்னெடுத்துச் செல்கிறது.

— Papertigers

இந்த நூலின் முதல் பதிப்பு 2021இல் வெளியாகியது.
காப்புரிமை © கதா, 2012, 2021
பிரதியின் காப்புரிமை © கீதா தர்மராஜன்
சித்திரங்களுக்கான காப்புரிமை © கதா
விலாசம்: A3, சர்வோதயா என்க்ளேவ்,
ஸ்ரீ அரபிந்தோ மார்க்
புது தில்லி - 110 017.
தொலைபேசி : 91-11 4141 6600 . 4141 6610
மின்னஞ்சல்: editors@katha.org,
இணையதளம்: www.katha.org

**எங்கள் குறிக்கோள்:** ஒவ்வொரு குழந்தையும் மகிழ்ச்சிக்கும், அர்த்தத்திற்கும் நன்றாக படிக்க வேண்டும்.

கதா பதிவு செய்யப்பட்ட, லாபநோக்கமற்ற அமைப்பு. 1988இல் துவங்கப்பட்டது. எழுத்தறிவு முதல் இலக்கியம் வரையிலான திட்டங்களை செயல்படுத்துகிறோம். வாசிப்பினால் கிடைக்கும் ஆனந்தத்தை குழந்தைகளும் பெரியவர்களும் உணரச்செய்வதே எங்கள் நோக்கம். நாங்கள் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ஏழைக் குழந்தைகளுடன் பணியாற்றி அவர்களை தர நிலை வாசிப்புக்கு கொண்டு வந்துள்ளோம்.

இந்த நூலின் அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. பதிப்பாளரின் எழுத்துபூர்வ முன் அனுமதி இன்றி இந்த நூலின் எந்தவொரு பகுதியும் எந்த வடிவத்திலும் மீள்பிரசுரம் செய்யப்படலாகாது; பயன்படுத்தப்படலாகாது.

எங்கள் நூல்களின் விற்பனை மூலம் கிடைக்கும் நிகர லாபத்தில் 10% சமூகத்தின் அடித்தட்டிலுள்ள குழந்தைகளின் வாசிப்புக்கும், அவர்களுக்கான வாழ்நாள் முழுவதுமான கற்றல்சார் திட்டங்களுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.



## இண்டிகோ தொடரில் இடம்பெறும்

மகிழ்ச்சிக்கும் அர்த்தத்திற்கும் படியுங்கள்








































**FOR OUR BOOKS**

www.books.katha.org

கதைகளின் வழியே
இந்தியாவின்
பல்கலாச்சார
அடையாளம்

— The Pioneer

for children

a katha book


ISBN 978-93-88284-81-3

9 789388 284813

www.katha.org


₹ xxx

மற்ற ஐ எல் ஆர் புத்தகங்கள்